செ.வெ.எண்:34/ஜீன் / 2019 நாள்:11.06.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. ஸ்ரீரங்கம் சேதுராப்பட்டி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் திரு.கே.சுந்தரராஜன் அவர்கள் தகவல்.**

---

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என ஸ்ரீரங்கம் சேதுராப்பட்டி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் திரு.கே.சுந்தரராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீரங்கம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் ஜுன் 12ஆம் தேதி வரை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கம் வட்டம், சேதுராப்பட்டியில் கடந்த 2013-14ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அமைப்பியல், இந்திரவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல், மின்னணுவியல் மற்றும் தொடர்பியல், கணினி அறிவியல் ஆகிய 5 பிரிவுகளில் பட்டயப் பாடப்பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. பிரிவு ஒன்றுக்கு 60 மாணவர் வீதம் முதலாண்டுக்கு 300 மாணவ,மாணவியர் சேர்க்கப்பட உள்ளனர். கல்விக் கட்டணம் கிடையாது.

நிகழ் கல்வியாண்டின் நேரடி இரண்டாமாண்டு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் ஜுன் 12ஆம் தேதி வரை இக்கல்லூரியில் வழங்கப்படுகிறது. இக்கல்லூரிக்கு விண்ணப்பித்த பணிரெண்டாம் வகுப்பு, ஐ.டி.ஐ. மாணவ, மாணவிகள் தங்களுக்கு கலந்தாய்வுக் கடிதம் கிடைக்கப் பெறாவிட்டாலும் விண்ணப்பித்த மாணவ, மாணவியர்கள் தற்போது காலியாக உள்ள (Civil, Computer) பிரிவுகளில் உள்ள இடங்களுக்கு ஜுன் 14.06.2019ல் நடைபெறும் துணை கலந்தாய்வில் பங்கேற்கலாம்.

முதலாமாண்டிற்கான சேர்க்கை துணை கலந்தாய்வு இப்பயிலக வளாகத்தில் வரும் ஜுன் 14.06.2019 ஆம் தேதி காலை 10 மணி அளவில் நடைபெறும். அதற்கான முதலாம் சேர்க்கைக்கான விண்ணப்ப படிவம் 13.06.2019 வரை வழங்கப்படுகிறது. இக்கல்லூரிக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவ, மாணவியர்களும் தற்போது காலியாக உள்ள (Civil, ECE, Computer) பிரிவுகளில் உள்ள இடங்களுக்கு துணை கலந்தாய்வு கடிதம் கிடைக்கப் பெறாவிட்டாலும் கலந்தாய்வில் பங்கேற்கலாம். இவ்வாறு ஸ்ரீரங்கம் சேதுராப்பட்டி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் திரு.கே.சுந்தரராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**